Budget 2020–21

# வரவு-செலவுத் திட்டம்: ஒரு கண்ணோட்டம்

## கடுமையாய் உழைக்கும் ஆஸ்திரேலியர்களுக்குக் குறைந்த வரிகள் (Lower taxes for hard-working Australians)

அடுத்த 12 மாதங்களில் தரப்படும் கூடுதலான 12.5 பில்லியன் டாலர்கள் உள்ளடங்க, இந்த வரவு-செலவுத் திட்டத்தில், பொருளாதார மீட்சிக்கு உதவியாக இருக்க ஒரு 17.8 பில்லியன் டாலர்களை 'தனிநபர் வருமான வரி நிவாரண'(personal income tax relief)மாக அரசாங்கம் அளிக்கிறது. ஏற்கனவே சட்டமாக இயற்றப்பட்டுள்ள 'தனி-நபர் வருமான வரித் திட்ட'(Personal Income Tax Plan)-த்தின் கீழ் 2020-21 வருமான ஆண்டில் கொடுக்கப்படவிருக்கும் 8.1 பில்லியன் வரி நிவாரணத்திற்கு மேலாக இது அமைகிறது.

அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள மாற்றங்களின் கீழ் குறைந்த-மற்றும் நடுத்தர வருமானம் உள்ளோருக்கான வரி ஈடுகட்டலின் மூலம் கிடைக்கும் 'ஒரு முறை மட்டும்' (one-off) தரப்படும் கூடுதல் ஆதாயம் மட்டுமில்லாமல், 'திட்ட'த்தின் '2-ஆம் நிலை'யில் வரித் துண்டிப்புகளை முன் கொண்டுவருவதன் மூலமும் தனிநபர்கள் 2020-21 -இல் ஆதாயம் அடைவார்கள்.

## வீடு கட்டும் தொழில்களுக்கான ஆதரவுதவி (Supporting housing construction)

வேலைகளை உருவாக்கவும், நமது பொருளாதாரத்தை மீள்கட்டமைப்பு செய்யவும், ஆஸ்திரேலியாவின்

எதிர்காலத்தைப் பாதுகாக்கவும் நமது பொருளாதார மீட்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக, கூடுதலாக 10,000 முதலாம் வீடு வாங்குபவர்களால், ‘முதல் வீட்டுக் கடன் முன்தொகைத் திட்ட’(First Home Loan Deposit Scheme) விரிவாக்கத்தின் கீழ் புதிய வீடு ஒன்றை விரைவாக வாங்க இயலும்.

புதிய வீடு அல்லது புதிதாகக் கட்டப்பட்ட வீடு ஒன்றை வாங்க உதவுவதற்காக 2020-21-இல் இந்தக் கூடுதலான 10,000 இடங்கள் அளிக்கப்படும். வீடு வாங்குவதற்கான கடன் தொகையில் 15 சதவீதத்திற்கு அரசாங்கம் உத்திரவாதம் அளிக்கும் நிலையில், 5 சதவீத முன்தொகையைக் கொண்டு புதிய அல்லது புதிதாகக் கட்டப்பட்ட வீடு ஒன்றை வாங்குவதற்கான கடனைப் பெற முதலாம் வீடு வாங்குபவர்களுக்கு இது ஏது செய்யும்.

## உள்கட்டுமான முதலீடுகள்

### (Infrastructure investment)

‘கோவிட்-19’ பெருந்தொற்று ஆரம்பித்ததில் இருந்து, அடுத்த நான்கு ஆண்டு காலத்தில் புதிய மற்றும் விரைவுபடுத்தப்படும் உள்கட்டுமானத் திட்டங்களில் கூடுதலாக ஒரு 14 பில்லியன் டாலர்களை முதலீடு செய்வதில் அரசாங்கம் பற்றுறுதி கொண்டுள்ளது. இந்தக் கட்டுமானப் பணிகள் நடைபெறும் காலத்தில், மேலதிகமாக ஒரு 40,000 வேலைகளுக்கு இந்தத் திட்டங்கள் உதவி செய்யும்.

இந்த முதலீடானது, 110 பில்லியன் டாலர்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ள அரசாங்கத்தின் வரலாறு காணாத 10-ஆண்டு போக்குவரத்து உள்கட்டுமான ‘முதலீட்டுக் குழாய்-வழி’யின் ஒரு பகுதியாகும், மற்றும் நாடெங்கிலும் உள்ள வேலைத்தலங்களில் 100,000-இற்கும் மேற்பட்ட வேலைகளுக்கு இது ஏற்கனவே ஆதரவுதவி அளித்துவருகிறது.

## வர்த்தகங்கள் மற்றும் முதலீடுகளுக்கான ஆதரவுதவி (Supporting business and investment)

புதிய முதலீடுகளுக்கு உதவவும், வர்த்தகப் பண ஓட்டத்தை அதிகரிக்கவும் ‘தற்காலிக வரி ஊக்கம்’ (temporary tax incentive) ஒன்றை அரசாங்கம் அளிக்கிறது, மற்றும் 11.5 மில்லியன் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கும் ஏறத்தாழ 3.5 மில்லியன் வர்த்தகங்களுக்கு (வர்த்தகங்களில் 99 சதவீதத்திற்கும் மேற்பட்டவை) இது கிடைக்கும். சுரங்கத் தொழில் சாரா வர்த்தகங்களால் மதிப்பு குறையும் சொத்துகளில் செய்யப்படும் 80 சதவீத முதலீடு உள்ளடங்க, ஏறத்தாழ 200 பில்லியன் டாலர்கள் மதிப்புள்ள முதலீடுகளுக்கு இந்த ஊக்கம் செல்லுபடியாகும். 6 அக்டோபர் 2020 மாலை 7.30 (AEDT) மணியில் இருந்து 30 ஜூன் 2022 வரை, 5 பில்லியன் டாலர்கள் வரைக்குமான புரள்வு உள்ள வர்த்தகங்களால், தகுதிபெறும் மற்றும் எந்த விலையையும் கொண்ட மதிப்பு குறையும் சொத்துகளுக்கான முழு செலவையும் அவை நிறுவப்படும் ஆண்டில் கழித்துக்கொள்ள இயலும். இந்தக் காலத்தில், தற்போது இருக்கும் தகுதிபெறும் மதிப்பு குறையும் சொத்துகளுக்காக செய்யப்படும் திருத்த மேம்பாட்டு வேலைகளுக்கு ஆகும் முழு செலவுகளும் கழித்துக்கொள்ளப்படலாம்.

பணத்திருப்பல் ஒன்றை உருவாக்குவதற்காக, ஏற்கனவே வரி செலுத்தப்பட்டுள்ள முந்தைய இலாபங்களை முன்னிட்டு இழப்புகளைக் கழிப்பீடு செய்துகொள்ளவும் 5 பில்லியன் டாலர்கள் வரைக்குமான புரள்வு உள்ள நிறுவனங்களை அரசாங்கம் அனுமதிக்கும். 8.8 மில்லியன் வரைக்குமான எண்ணிக்கையுள்ள தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் ஏறத்தாழ 1 மில்லியன் நிறுவனங்களுக்கு

‘இழப்புத்-திருப்பு வசதி’ (loss carry-back) கிடைக்கும். 2021-22-இல் ஏற்பட்ட இழப்புகளை 2018-19-இல் அல்லது அதற்குப் பிறகு ஈட்டப்பட்ட இலாபங்களுக்கு ஈடாக பின்னெடுத்துச் செல்லலாம். தகுதி பெறும் நிறுவனங்கள் அவர்களது 2020-21 மற்றும் 2021-22 வரி அறிவிப்புகளைத் தாக்கல் செய்யும்போது வரிப் பணத்திருப்பல்களைப் பெறுவார்கள்.

## ‘டிஜிடல் ஆஸ்திரேலியா’ (A digital Australia)

ஆஸ்திரேலிய வர்த்தகங்களாலும், நுகர்வோர்களாலும் ‘டிஜிடல்’ தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுவதை ‘கோவிட்-19’ பெருந்தொற்று விரைவுபடுத்தியிருக்கிறது, மற்றும் தமது இயங்குமுறைகளை மாற்றிக்கொண்டு இந்த நெருக்கடியின் ஊடாக வர்த்தகத்தைத் தொடர்ந்து மேற்கொள்ள அனேகருக்கு இது ஏது செய்திருக்கிறது.

பொருளதாரத் துறையில் - வர்த்தகங்கள் மற்றும் நுகர்வோர் ஆகிய இருவராலும் - புதிய தொழில்நுட்பங்கள் இன்னும் அதியளவில் தழுவப்படுவதற்கு ஆதரவுதவி அளிக்க அரசாங்கத்தின் ‘டிஜிடல் வர்த்தகத் திட்டம்’ (Digital Business Plan) இந்த உந்துவிசையை அடித்தளமாகக் கொண்டு அமையும்.

‘என்.பி.என்’ (NBN) நிறுவனத்தில் செய்யப்படும் கூடுதலான ஒரு 4.5 பில்லியன் டாலர்கள் முதலீடானது மில்லியன் கணக்கான குடும்பங்களுக்கும், வர்தகங்களுக்கும் அதியுயர்-வேக ‘ப்ராட்பேண்ட்’ வசதியைக் கொண்டுவரும். 29.2 மில்லியன் டாலர்களுக்கான நிதியுதவியும் ‘5-ஜி’ வலையமைப்பின் வெளி-உருட்டலை துரிதப்படுத்தும்.

## வர்த்தகம் மேற்கொள்ளப்படும் விதத்தில் செய்யப்படும் மேம்பாடுகள் (Improving the ease of doing business)

‘சிவப்பு நாடா’ எனப்படும் அரச-அலுவல்-கெடுபிடி முறைகளைத் துண்டிப்பதென்பது ஆஸ்திரேவிற்காக அரசாங்கம் கொண்டுள்ள ‘பொருளாதார மீட்சித் திட்ட’(Economic Recovery Plan)த்தின் முக்கியமானதொரு கூறாகும். ஆகவேதான், முதலீடு செய்வது, வேலைகளை உருவாக்குவது, சவால்களுக்கான எதிர் நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்வது மற்றும் வாய்ப்புகளைக் கவ்வுவது ஆகிய செயல்களை அரசாங்கம் இன்னும் எளிதானதாக ஆக்கிக்கொண்டிருக்கிறது.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில், அரசாங்கமானது:

- ஒழுங்குமுறைச் செயல்பாட்டு முறை’(regulatory process)கள்’ பலவற்றை சீரமைப்பு செய்து அவற்றை ‘டிஜிடல்’ மயமாக்கும்
- தேவையற்ற செலவுகளைச் சுமத்தி வர்த்தக நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் ஒழுங்குமுறைகளைக் குறைக்கும்
- மீட்சிக் காலத்தின் ஊடாக சிறு வர்த்தகங்களுக்கு ஆதரவுதவியளிக்கும்.

## ‘ஜாப்-மேக்கர்’ வேலை-உருவாக்க சலுகை’ (JobMaker Hiring Credit)

வேலை தேடிக்கொண்டிருக்கும் 16 முதல் 35 வயது வரையுள்ள இளம் தொழிலாளர்களைக் கூடுதலாக வேலையில் அமர்த்திக்கொள்ள மீட்சிக் காலத்தில் வர்த்தகங்களுக்கு சலுகைகளைக் கொடுப்பதன் மூலம்

வேலைவாய்ப்புத் துறையில் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கு அரசாங்கத்தின் புதிய 'ஜாப்-மேக்கர் வேலை-உருவாக்க சலுகை' (JobMaker Hiring Credit) எனும் திட்டம் உதவும். 'ஜாப்-மேக்கர் வேலை-உருவாக்க சலுகை' என்பது ஆஸ்திரேலியாவின் பொருளாதார மீட்சியை ஊக்குவிப்பதற்கான அரசாங்கத்தின் 'ஜாப்-மேக்கர் திட்ட'(JobMaker Plan)த்தின் முக்கியமானதொரு பகுதியாகும்.

'ஜாப்-மேக்கர் பணியமர்த்து சலுகை'யானது **ஏறத்தாழ 450,000 எண்ணிக்கையுள்ள இளைஞர்களுக்கான பணியிடங்களுக்கு ஆதரவுதவியளிக்கும்** என்றும், 2020-21 முதல் 2122-23 வரை இதற்கு 4 பில்லியன் டாலர்கள் செலவாகும் என்றும் மதிப்பிடப்படுகிறது.

## கல்வி, திறன்கள் மற்றும் 'தொழிற்பயிற்சிக'(apprenticeships)ளில் முதலீடு

### (Investing in education, skills and apprenticeships)

"ஜாப்-மேக்கர்' திட்ட'த்தின் ஒரு பகுதியாக, திறன் மேம்பாட்டிற்கு அரசாங்கம் உயர் முந்துரிமை அளிக்கிறது. அரசாங்கத்தின் பற்றுறுதியானது மக்கள் வேலைகளில் சேர உதவிகரமாக இருக்கும் மற்றும் வருங்கால வேலைகளுக்கான சரியான திறன்களை ஆஸ்திரேலியர்கள் கொண்டிருப்பதை உறுதிப்படுத்தும்.

- 'ஜாப்-ட்ரெய்னர்' (JobTrainer) - ஆஸ்திரேலியத் தொழிலாளர் படையின் வளர்ப்பில் ஈடுபாடு
- மீட்சிக்கு உதவுவதற்காக புதிய தொழிற்பயிற்சிகள்
- வேலை தேடுவோருக்கான ஆதரவுதவிகள்
- படித்து முடித்து வேலைக்கு ஆயத்தமாக உள்ளவர்களின் எண்ணிக்கையில் உயர்ச்சி
- ஆஸ்திரேலியர்களுக்கான மறு-திறன் மற்றும் திறன்-மேம்பாட்டிற்கான குறுகிய கால படிப்புகள்

## பெண்களுக்குப் பொருளாதார ரீதிப் பாதுகாப்பு அளித்தல்

### (Delivering economic security for women)

பெண்களது தொழிலாளர் படைப் பங்கேற்பினை அதிகரிக்கவும், அவர்களது ஊதியம் ஈட்டும் திறனை மேம்படுத்தவும், அவர்களது பொருளாதார சுதந்திரத்தை உயர்த்தவும் '2020 மகளிர் பொருளாதாரப் பாதுகாப்புக் கூற்'(2020 Women's Economic Security Statement)றினை அரசாங்கம் ஏற்படுத்துகிறது. இந்த 240.4 மில்லியன் திட்டமானது வேலை வாய்ப்புகளையும், பெற்றோர்களுக்கும், தொழிலாளர் படையிலுள்ள பெண்களுக்குமான ஆதரவுதவியையும் அளிக்கும்.

பெண்களது தலைமைத்துவம் மற்றும் மேம்பாட்டிற்கு ஆதரவுதவி அளிக்கவும், 'விஞ்ஞானம் (science), தொழில்நுட்பம் (technology), பொறியியல் (engineering) மற்றும் கணிதம் (mathematics)' (STEM), வர்த்தகம் மற்றும் ஆண்-ஆதிக்கத் தொழில்கள் ஆகிய துறைகளில் பெண்களுக்கான வாய்ப்புகளை அதிகரிப்பதற்குமான வேலை வாய்ப்புத் திட்டங்களை இது உள்ளடக்குகிறது.

## உற்பத்தி மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு ஆதரவுதவி (Supporting manufacturing and research and development)

சரக்கு வினியோக சங்கிலித்-தொடர்கள் மற்றும் வளைந்துகொடுக்கும் தன்மையுள்ள, தழுவுவதற்கேற்ற மற்றும் புதினத்துவம் கொண்ட உற்பத்தித் திறன்களைக் கொண்டிருத்தல் ஆகியவற்றின் இன்றியமையா முக்கியத்துவம் என்ன என்பதை இந்த 'கோவிட்-19' பெருந்தொற்று வெளிச்சமிட்டுக் காண்பித்துள்ளது.

அரசாங்கத்தின் 1.5 பில்லியன் டாலர்கள் மதிப்புள்ள 'நவீன பொருளுற்பத்தி யுக்தி' (Modern Manufacturing Strategy) என்பது ஆஸ்திரேலியாவின் பொருளாதார மீட்சிக்கு உதவும் ஒரு நீண்ட-காலத் திட்டமாகும்.

'ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு வரிச் சலுகை' (Research and Development Tax Incentive)- யின் ஊடாக அரசாங்கம் ஒரு கூடுதலான 2 பில்லியன் டாலர்களை முதலீடு செய்கிறது.

## மின் மற்றும் எரிவாயு ஆற்றல் பாதுகாப்பு மற்றும் சந்தைச் சீர்திருத்தங்கள் (Energy security and market reforms)

தேசிய அளவில், வீட்டு உபயோக மின்சார விலைகளில் டிசம்பர் 2018-இல் இருந்து 4.7 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதோடு, கடந்த 12 மாதங்களாக மொத்த விற்பனை விலைகள் குறைந்து வருகின்றன. குறைவான விலைகளைப் பராமரிக்கும் பொருட்டு, வினியோகத்திற்கான உற்பத்தித் திறனை அதிகரிக்க தனியார் வழங்குநர்களுடனும், செயல்திறமான மற்றும் ஒருங்கிணைப்பான முறைமை ஒன்றை உறுதிப்படுத்த தேசிய அமைச்சரவையுடனும் அரசாங்கம் இணைவாய்ச் செயலாற்றும்.

விலைகளைக் குறைவாக வைத்திருக்கவும், புதிய வேலைகளை உருவாக்கவும், உள்ளூர்த் தொழில்களுக்கு ஆதரவுதவியளிக்கவும் ஆஸ்திரேலியாவின் மின்சார, எரிபொருள் மற்றும் எரிவாயு இருப்புகளை அரசாங்கம் வசப்படுத்துகிறது.

## மீண்டெழும் பிராந்தியப் பகுதிகளுக்கு ஆதரவுதவி (Supporting resilient regions)

வெள்ளப்பெருக்கு, தீ, வறட்சி மற்றும் இப்போது 'கோவிட்-19' ஆகியவற்றை எதிர்த்துத் தாங்கியுள்ள பிராந்திய ஆஸ்திரேலியாவுடன் அரசாங்கம் உடன்துணையாக நிறபதைத் தொடர்ந்துவருகிறது. 550 மில்லியன் டாலர்களுக்கும் மேலான பிராந்தியப் பகுதிகளுக்கான திட்டத்தின் வாயிலாக 'கோவிட்-19'-இன் தாக்கங்களில் இருந்து மீள நமது பிராந்தியப் பகுதிகளுக்கு அரசாங்கம் உதவும். 1 பில்லியன் டாலர்கள் மதிப்புள்ள ''கோவிட்-19' நிவாரண மற்றும் மீட்சி நிதி' (COVID-19 Relief and Recovery Fund)-யின் மூலம் அளிக்கப்படும் ஆதரவுதவிக்கும் மேலாக இது அமைகிறது.

## அதி பாதுகாப்பான, மீண்டெழு திறன் வாய்ந்த ஆஸ்திரேலியா (A more secure and resilient Australia)

நமது நீர்வளப் பாதுகாப்பினை அதிகரிக்கவும், பிராந்தியங்களது

மீண்டெழு திறனை நிறுவவும், வேலைகளை அளிக்கவும், நமது இன்றியமையா வேளாண்மைத் துறையை வளர்க்கவும் உதவும் வகையில், 21-ஆம் நூற்றாண்டிற்கான நீர்வள உள்கட்டுமானங்களை ஆஸ்திரேலியா அமைத்துவருகிறது. 'தேசிய நீர்வள உள்கட்டுமான வளர்ச்சி நிதி'(National Water Infrastructure Development Fund)-யின் கீழ் அமையும் புதிய திட்டங்களுக்கான 2 பில்லியன் டாலர்கள் மதிப்புள்ள ஒரு முதலீடு 'வினியோக-வலை'(Grid)யின் ஊடாக அமையும் அடுத்த தலைமுறை நீர்வள உள்கட்டுமானத்திற்கு ஆதரவுதவி செய்யும்.

பிராந்தியப் பகுதிகளின் அபிவிருத்திக்கு ஆதரவுதவியளிக்கும் அதே வேளையில், 'பேசின்-வடிகால்' (the Basin) பகுதியின் வளத்தினை மேம்படுத்தும் 'மரே-டார்லிங்க் சமூகங்கள் முதலீட்டுத் திட்ட'(Murray-Darling Communities Investment Package)த்திலும் அரசாங்கம் 270 மில்லியன் டாலர்களை முதலீடு செய்கிறது.

அத்தியாவசிய சேவைகளுக்கு ஆதரவுதவியளிப்பதற்காக உள்கட்டமைப்பு வசதிகளில் இருந்து 'வட ஆஸ்திரேலியா' தொடர்ந்து பலனடைய இயலுமாயிருப்பதை உறுதிப்படுத்த 'வட ஆஸ்திரேலிய உள்கட்டுமான வசதி' (Northern Australia Infrastructure Facility (NAIF)) எனும் திட்டத்தைக் கூடுதலாக இன்னும் ஒரு ஐந்து ஆண்டுகளுக்கு, ஜூன் 2016 வரை, அரசாங்கம் நீட்டித்துள்ளது, மற்றும் இதன் கடனளிப்புத் தேவைப்பாடுகளை விரிவுபடுத்தியுள்ளது.

## நமது சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் (Protecting our environment)

நமது சமுத்திரங்களைப் பாதுகாக்கவும், அவற்றின் வளத்தை மீட்கவும் அரசாங்கம் 47.4 மில்லியன் டாலர்களை முதலீடு செய்கிறது, மற்றும் 'பொதுநல அரசு நில'(Commonwealth land)ங்களில் இரசாயன தூய்மைக்கேடு ஏற்படும் ஆபத்தினைக் குறைக்க 29.1 மில்லியன் டாலர்களை ஒதுக்குகிறது.

மறுசுழற்சி உள்கட்டமைப்புகளை நவீனமயமாக்கவும், கழிவுப்பொருட்களைக் குறைக்கவும், ஆஸ்திரேலியாவிற்குள்ளாக அதியளவில் மறுசுழற்சி செய்யவும் நான்கு ஆண்டு காலத்தில் அரசாங்கம் 249.6 மில்லியன் டாலர்களை முதலீடு செய்யும்.

## 'கோவிட்-19' தொற்றினைத் தடுத்தல், கண்டுபிடித்தல் மற்றும் அதற்கான சிகிச்சையளித்தல் (Preventing, detecting and treating COVID-19)

இந்தப் பெருந்தொற்றுக் காலத்தின் ஊடாக அவர்களுக்குத் தேவைப்படும் மருத்துவ பராமரிப்பையும், ஆதரவுதவியையும் ஆஸ்திரேலியர்கள் தொடர்ந்து பெறுவதை உறுதிப்படுத்தும் வகையில், பல வகையான சுகாதார நடவடிக்கைகளுக்காக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அரசாங்கம் 4.9 பில்லியன் டாலர்களை முதலீடு செய்கிறது. இந்த வளைந்துகொடுக்கும் மற்றும் விரிவாக்கம் செய்யப்படவல்ல பதில்-நடவடிக்கை முறைமையானது அனைத்து ஆஸ்திரேலியர்களையும் பாதுகாப்பதற்கான செயல்பாடுகளை மேற்கொள்ள சுகாதார முறைமைக்கு ஏது செய்கிறது.

## பெருந்தொற்றுக் காலத்தின் ஊடாக ஆஸ்திரேலியர்களுக்கு ஆதரவுதவியளித்தல் (Supporting Australians through the pandemic)

இந்த 'கோவிட்-19' பெருந்தொற்றுக் காலத்தின் ஊடாக ஆஸ்திரேலியர்களுக்கு நிதியுதவி அளிப்பதற்காக அரசாங்கம் முன்நிகழ்ந்திராத, பின் வருவனவற்றை உள்ளடக்கிய, நிதியுதவியினை அளித்து வருகிறது:

- 'ஜாப்-கீப்பர்' கொடுப்பனவு
- தனிநபர்களுக்குக் கூடுதல் வருமானம்
- ஓய்வூதியர்கள் மற்றும் இதர தகுதிபெறும் பெறுனர்களுக்குக் கூடுதலாக இரண்டு பொருளாதார ஆதரவுதவிக் கொடுப்பனவுகள்
- 'சூப்பர்-ஆனுவேஷன்' ஓய்வுகால நிதியைத் தற்காலிகமாக அணுகும் வசதி

## உங்களுடைய எதிர்காலம், உங்களுடைய 'சூப்பர்'நிதி (Your Future, Your Super)

ஆஸ்திரேலியர்களது ஓய்வுகாலத்திற்கான சேமிப்புகளை அதிகரிப்பதற்காக அவர்களுடைய 'சூப்பர்' நிதி நல்ல விதமாக முதலீடு செய்யப்படுவதில் அரசாங்கம் பற்றுறுதி கொண்டுள்ளது.

அரசாங்கத்தின் 'உங்கள் எதிர்காலம், உங்கள் சூப்பர்' (Your Future, Your Super) எனும் சீர்திருத்தங்கள் அரசாங்கத்தின் அடுத்த கட்ட சீர்திருத்த செயல்திட்டமாகும், மற்றும் அடுத்த தசாப்தத்தில் ஆஸ்திரேலியர்கள் 17.9 பில்லியன் டாலர்கள் சேமிப்பதை இத் திட்டம் காணும்.

## ஆஸ்திரேலியர்களைப் பாதுகாப்பாக வைத்திருத்தல் (Keeping Australians safe)

ஆஸ்திரேலியாவின் இணையப் பாதுகாப்புத் திறன்கள் வலுவானவை, ஆனாலும் நாம் எதிர்கொள்ளும் இணையவழி அச்சுறுத்தல்கள் அதிகரித்துவருகின்றன. இணையவழியாக நாம் எந்த அளவிற்கு வாழ்கிறோம் மற்றும் பணியாற்றுகிறோம் என்பதை 'கோவிட்-19' கோடிட்டுக் காண்பித்திருக்கிறது. '2020 இணையப் பாதுகாப்பு யுக்தி' (2020 Cyber Security Strategy) எனும் திட்டத்தினை அளிப்பதற்காக அரசாங்கம் கூடுதலாக ஒரு 201.5 மில்லியன் டாலர்கள் வழங்கும்.

அச்சுறுத்தல்கள் உள்ள சிக்கலான சூழல் அதிகரித்துவரும் நிலையில் ஆஸ்திரேலியர்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான திறன்களை வலுப்படுத்திக்கொள்வதற்காக 'ஆஸ்திரேலிய ஃபெடரல் காவல்துறை'(AFP)-க்கு 300.2 மில்லியன் டாலர்களை ஒதுக்குவதன் மூலம் நம்மைப் பாதுகாப்பாக வைத்திருப்போருக்கு அரசாங்கம் ஆதரவுதவி அளிக்கிறது.

## நமது பிராந்தியத்திற்கு ஆதரவுதவி (Supporting our region)

பஸிஃபிக் மற்றும் தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மை, வளம் மற்றும் மீண்டெழு திறனில் ஆஸ்திரேலியா கொண்டிருக்கும் ஆழ்ந்த மற்றும் நிரந்தர அக்கறை

ஆஸ்திரேலியாவின் ‘பஸி்ஃபிக் அதி-மும்முர நடவடிக்கைகள்’ (Pacific Step Up) மற்றும் இதர அடியெடுப்புகளில் பிரதிபலிக்கப்படுகிறது. நமது பிராந்தியத்தின் மீட்சியை உறுதிப்படுத்த அரசாங்கம் செய்து வருவன:

- பஸி்ஃபிக் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கான ‘கோவிட்-19 தடுப்பூசி வசதி மற்றும் சுகாதாரப் பாதுகாப்புத் திட்ட’(COVID-19 Vaccine Access and Health Security Program)த்தில் முதலீடு செய்கிறது.
- ‘பஸி்ஃபிக் பிராந்திய ஆஸ்திரேலிய உள்கட்டுமான நிதிவசதி’ (The Australian Infrastructure Financing Facility for the Pacific)
- ‘கோவிட்-19 மீட்சி - பஸி்ஃபிக் மற்றும் திமோர்-லெஸ்த்தே-விற்கான ஆரவுதவி’ (COVID-19 Recovery - Support to the Pacific and Timor Leste)
- தென்மேற்கு பஸி்ஃபிக் பிராந்தியத்தில் பாதுகாப்பு உள்கட்டமைப்புத் திட்டங்களை செயல்படுத்திவருகிறது.